# 18

# தமிழ் இணையம்

கணினி என்னும் கம்பியூட்டர் மனிதனின் எல்லா நிலைகளிலும் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்து விட்டது. அலுவலகமாக இருந்தாலும் சரி, ஆராய்ச்சிக் கூடங்களாக இருந்தாலும் சரி, பள்ளிகள், கல்லூரிகள் என எல்லா இடங்களிலும் தகவல்களைப் பெற்று அதனைச் சேகரித்து வைத்து, மீண்டும் பயன்படுத்த கணினியின் தேவை அடிப்படையான ஒன்றாகி விட்டது. இணையம் எனும் இன்டர்நெட் (Internet) அறிமுகத்திற்குப் பின் அதன் தேவை பன்மடங்காகப் பெருகி விட்டதை நாம் அறிவோம்.

கணினியை ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டுந்தான் பயன்படுத்தமுடியும் எனச் சிலர் இன்றளவும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கணினி மொழி எல்லையைத் தாண்டி உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழும் மக்களுக்குப் பயனளித்துக் கொண்டிருக்கின்றது. இந்த வகையில் தமிழர்களாகிய நாம் அதனை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதை நோக்குவது சிறப்பு.

நம்மில் பலரும் கணினியை ஏதோ ஒரு வகையில் பயன்படுத்திக் கொண்டு தானிருக்கின்றோம். கணினியை வைத்திருக்கின்றோம் என்பது ஒரு சாதாரண விஷயமே. அதை எவ்வாறு நமது குடும்ப மேம்பாட்டிற்கு, சுயமேம்பாட்டிற்கு பயன்படுத்துகிறோம் என்பதே கேள்வி.


இணையத்தில் தமிழ் பேசும் மக்களுக்கான பக்கங்கள் ஏராளமாக இருக்கின்றன. தமிழகத்திலிருந்து வருகின்ற தமிழ் பத்திரிகைகளாகிய **விகடன், குமுதம், தினமணி** போன்ற பல பத்திரிகைகள் எல்லோருக்கும் எப்போதும் இணையத்தின் வழியே கிடைக்கின்றன. அத்தோடு அச்சு வடிவமற்ற இணைய பத்திரிகைகள் பலவும் கூட வலம் வந்து கொண்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு

http : // www. ambalam .com

http : // www . wabulagam.com போன்றவை

இவை ஒவ்வாரு நாளும் புதுப்பிக்கப்பட்டு எல்லோரும் செய்திகளை அறிந்து கொள்ளும் வகையில் அழகாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன.




இவை தவிர, இணையத்தினூடாக இடைவிடாது இருபத்துநான்கு மணி நேரமும் கேட்டு மகிழவும் வானொலிகள் இருக்கின்றன. இணையத்தின் வழி செய்திகளையும் விபரங்களையும் மட்டும் அறிந்து கொள்வதோடு, எவ்வகையில் அதனைப் பயன்படுத்தி நமது சிந்தனைத் திறனையும் அறிவையும் பெருக்கிக்கொள்ள முடியுமெனச் சிந்திப்பது சிறப்பு.

ஒரு கருத்தானது நம்மிடம் இருக்கும் போது அது சிறப்படைய, அக்கருத்து பலரிடம் சென்று சேர்ந்து, அதனை விவாதித்து, அதனைச் செம்மைப்படுத்தும்


போது அக்கருத்து வளம் பெற்று, பலருக்கும் உதவுகின்ற ஒன்றாக அமைய வாய்ப்புக்கள் உண்டு. அந்தவகையில் உங்களது கருத்துக்களை மற்றவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் நீங்கள் வெளியிடும் பல (FORUM) மடலாடற் குழுக்கள் இயங்கி வருகின்றன. இவ்வகை மடலாடற் குழுக்களினூடே உலகில் பல பாகங்களிலிருந்தும் மக்கள் செய்திப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும். இந்த மடலாடற் குழுக்கள் ஒரு தனிப்பட்ட விசயத்தை ஆய்வு செய்வதற்காகவோ அல்லது பொதுவாக எல்லா விஷயங்களையும் பற்றி விவாதித்து கருத்துப் பரிமாற்றத்தை வளர்ப்பதற்காகவோ அமைந்திருக்கின்றன. இவ்வகையிலான மடலாடற் குழுக்களில் சேர்ந்து பங்களிப்பது மிகவும் சுலபமானதே.

http:// www. groups.yahoo.com/groups / esuadi

http:// www. groups.yahoo.com/groups / tamilulagam

http:// www. groups.yahoo.com /groups/ meykandhan

http:// www. groups.yahoo.com/groups /agathiyar



இவ்வகை மடலாடற் குழுக்களின் வழி பல அரிய திட்டங்கள் தனித் தமிழுக்காக வகுக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழில் கிடைக்கின்ற அத்தனை புத்தகங்களையும் மின்வடிவாக்கும் முயற்சியில் இறங்கி, மதுரைத் திட்டம் பல புத்தகங்களைச் சேர்த்துள்ளது. இதன் இணைய முகவரி

http:// www.projectmadurai.com

இம் முயற்சியில் பங்களிக்க அடிப்படையில் நமக்குத் தேவையானது முயற்சியும் சேவை மனப்பான்மையுமேயாகும். இந்த வலைப்பக்கத்தில் இதுவரை மின் வடிவாக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான நூல்கள் இருக்கின்றன. அவை எல்லோருக்கும் பொதுவானவை. வாசகர்களாகிய நீங்களும் உங்களுக்குச் சிறப்பாக தெரிகின்ற ஏதாவது ஒரு நூலை மின்பதிப்பாக்கி இங்கு சேகரிக்கலாம். மலேசியாவில் நடந்த நான்காம் அனைத்துலக கணினிக் கருத்தரங்கின் பிறகு தமிழ் மரபு அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளையின் வழி, ஓலைச்சுவடிகள் மறுபதிப்பு, சேகரிப்பு மேலும் அதனை ஒட்டிய ஆய்வுகள் என பல்வேறு கோணங்களில் தமிழர்களின் மரபு சார்ந்தவற்றை மின்பதிப்பாக்கி பாதுகாக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தத்திட்டத்தில் உலகில் வாழும் அனைத்துத் தமிழர்களும் கலந்து சிறப்புச் சேர்க்க முடியும். மேலும் தகவல்களைப் பெறுவதற்கு.

http:// www .infitt.org எனும் வலைப்பக்கம் உதவும்.

கணினியின் வழி, மொழி அறிவை மாத்திரமே பெருக்கிக் கொள்ள முடியும் என சிலர் நினைத்துக் கொண்டிருக்கலாம். இது முற்றிலும் தவறான ஒரு கருத்து. மொழிப் பயிற்சியோடு பல தொழில்நுட்பத் திறனையும் கூட வளர்க்கின்ற ஊடக மாக இணையம் விளங்குகின்றது. இணையம் வழியாக கணினி இயந்திர தொழில்நுட்ப கல்வியைச் சிறார்களுக்குச் சிறு வயதிலேயே தமிழில் அறிமுகப்-படுத்தப்படும் ஒரு திட்டத்தினை உருவாக்கி வருகின்றேன். இப்போது இத்திட்டமானது மலேசியாவில் இயங்கி வருகின்ற ஒரு தொடக்கப்பள்ளியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் வழியாக அனைத்துச் சிறார்களும் பங்குபெற்றுப் பயன் பெற முடியும். இதனைப்பற்றி மேலும் அறிந்துக்கொள்ள,

http:// www.subaonline.de

என்ற வலைப்பக்கத்திற்குச் சென்று அங்கு Education என்ற பகுதிக்குச் சென்று பார்க்கலாம்.

தகவல் தெரிந்த சமுதாயமே மேம்பாடு அடைந்த நாகரிகம் பெற்ற சமுதாயமாகக் கருதப்படுகிறது. பெண்கள் தங்களது வாழ்க்கையை ஓர் சிறிய வட்டத்திற்குள் மட்டுமே திணித்துக் கொண்டு வாழும் போது அங்கு சிந்தனைக்கு விடுதலை கிடைக்க வாய்ப்பில்லை.இணையம் பெண்கள் தங்களது சிந்தனைத் திறனை சீரிய வகையில் வளர்க்க பெரும் வகையில் உதவுகின்றது. கல்வி என்பது பள்ளிப்படிப்போடு மட்டும் முடிந்து விடக்கூடிய ஒன்றல்ல.

கணினியின் வழியாக பட்டப்படிப்பை உலகின் பல பாகங்களிலும் இயங்கி வருகின்ற பல்கலைக்கழகங்களிலும் படித்து பட்டம் பெற இப்போது இணையம் வழிவகுத்துக் கொடுத்துள்ளது. வீட்டில் இருந்தபடியே வேலை செய்து பணம் சேகரிக்கவும்கூட பல திட்டங்களை இணையம் வழங்குகின்றது.

சில இணையத்தளங்கள்

தமிழ் இணையப்பல்கலைக்கழகம்
அம்பலம் இணையத்தளம்
விபுலகம் இணையத்தளம்
சுவடி இணையத்தளம்
தமிழகம் இணையத்தளம்
அகஸ்தியர் இணையத்தளம்
மதுரைத் திட்டம்
சுபா வலைப்பின்னலின் கல்வி



சுபா

## அரும்பதங்கள்

| | |
|---|---|
| இணையம் | - சர்வதேச வலைப்பின்னல் அமைப்பு |
| அறக்கட்டளை | - பொது நலனை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்காக தனி நபர்கள் அல்லது அரசு ஏற்படுத்தும் நிதி அமைப்பு |
| ஓலைச்சுவடி | - ஓலையை ஏடாகக் கொண்ட புத்தகம் |
| மலேசியா | - தென்கிழக்காசியப் பிராந்தியத்திலுள்ள ஒரு நாடு |

## கிரகித்தற் பயிற்சி

***பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.***

*1 இணையதளத்தில் வலம்வரும் தமிழகத் தமிழ் பத்திரிகைகள் எவை என ஆசிரியர் கூறுகிறார்?*

*2 இணையத்தின் பயன்பாடுகளைத் தருக.*

*3 மக்கள் செய்திப் பரிமாற்றம் செய்துகொள்ள இணையத்தளம் எவ்வகையில் பயன்படுகிறது?*

*4 பாட நூலில் வரும் இணையதள முகவரிகள் சில தருக.*

*5 மதுரைத்திட்ட இணையதளத்தின் பயன்பாடு யாது?*

*6 இக்கட்டுரையின் மூலம் ஆசிரியர் கூறும் விடயங்களை சுருக்கமாக எழுதுக.*

*7. கணினியால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து எழுதுக.*

# மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு1 : சோடியாக செயற்பட்டு வாக்கியம் அமைக்குக

1 இணையம்
2 வலைப்பின்னல்
3 தகவல் தொழில்நுட்பம்
4 மின்னஞ்சல்

செயற்பாடு2 : இணையப் பயன்பாட்டினால் ஏற்படும் நன்மைகளை உமது குழுவினருடன் கலந்துரையாடுக.

செயற்பாடு3 : குழுவாகச் செயற்பட்டு இலங்கையில் காணப்படும் கல்வி சார்ந்த இணையத்தள முகவரிகளைச் சேகரிக்குக.

செயற்பாடு4 : பாடசாலையில் அல்லது இணையவசதி உள்ள இடத்திற்குச் சென்று தமிழ் மொழியில் இயங்கும் இணையத்தளம் ஒன்றினைத் திறந்து எமக்குத் தேவையான தகவல்களைத் திரட்டிப் பயிற்சி பெறுக.

செயற்பாடு5 : இலங்கையின் இணையத்தளத்தில் வரும் பத்திரிகைகளை அறிந்து எழுதுக.

# மொழிவளம்

## கலைச் சொற்கள்

நமது வாழ்க்கை வேகமாக மாற்றமடைந்து கொண்டிருக்கிறது. தினமும் புதிய புதிய பொருட்களின் அறிமுகத்தையும் அறிவியல் தகவல்களையும் (விஞ்ஞான செய்திகளையும்) பெறுகின்றோம். அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் சற்ற லைட், ஃபேன், டேப்ரிக்காடர், டெலிவிசன் முதலிய சொற்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அறிவியலுடன் தொடர்புடைய இவ்விதமான சொற்களை நமது மொழியில் பயன்படுத்துவதற்கு புதிய சொற்களை ஆக்கிக் கொள்கின்றோம். இதனையே **கலைச்சொற்கள்** என்போம்.

**அதே வடிவத்தில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள்**

| | |
|---|---|
| சிமன்ட் | அன்டனா |
| பெற்றோல் | டொலர் |
| டீசல் | டயர் |
| கியர் | பலூன் |
| கிளச் | |

**தமிழ் வடிவத்தில் வழங்கப்படும் கலைச்சொற்கள்**

ஃபேன் - மின்விசிறி
லைட் - மின் குமிழ்
ஜியோகிரபி - புவியியல்
பஸ் - பேருந்து
எஞ்சின் - எந்திரம், இயந்திரம்
பைல் - கோப்பு
டெலிவிசன் - தொலைக்காட்சி

**தமிழ் ஒலி வடிவத்திற்கு ஏற்ப வழங்கப்படும் கலைச் சொற்கள்**

ஒட்சிசன் நொத்தாரிசு
குளுக்கோசு பொசுபேற்று
பொலிசு

## பயிற்சி

புவியியல், விஞ்ஞானம், கணிதம் ஆகிய நூல்களில் இடம்பெறும் கலைச் சொற்களை இனங்கண்டு அவற்றில் சிலவற்றைப் பட்டியற்படுத்துவோம்.

# இலக்கணம்

## இடைச்சொற்கள்

இடைச்சொற்கள் பலவகைப்படும் என்று கற்றிருக்கிறோம். அவைகளில் உம், ஆவது ஓ, கூட ஆகிய இடைச் சொற்கள் எவ்வாறு வாக்கிய உருவாக்கத்திற்கு உதவுகின்றன என்பதனைக் கற்போம்.

**உம் என்ற இடைச்சொல் எவ்வாறு பொருளுடைய வாக்கியங்களை ஆக்குவதற்கு உதவுகின்றது என்பதைப் பார்ப்போம்.**

- ★ சாந்தியும் மனோகரனும் வந்தனர்.
- ★ இரண்டும் மூன்றும் ஐந்து.
- ★ மழை விட்டதும் போய்விடுவோம்.

**ஆவது என்ற இடைச்சொல்லை எவ்வாறு வாக்கியங்களை ஆக்குவதற்கு உதவுகின்றன என்பதைப் பார்ப்போம்.**

- ★ இன்றாவது விளையாடுவோம்.
- ★ நீயாவது சொல்வாயா?
- ★ எப்போதாவது வந்து போவார்.

**ஓ என்ற இடைச் சொல்லைப் பயன்படுத்தி எவ்வாறு பொருளுடைய வாக்கியங்களை ஆக்கலாம் என்பதைப் பார்ப்போம்.**

- ★ இன்றைக்கு நீ வருவாயோ.
- ★ யாரோ சொன்னார்கள்.
- ★ இன்றோ நாளையோ மழை பெய்யும்.

**கூட என்ற இடைச் சொல்லைப் பயன்படுத்தி எவ்வாறு பொருளுடைய வாக்கியங்களை ஆக்கலாம் என்பதைப் பார்ப்போம்.**

- ★ இன்று ஒருவர் கூட வரவில்லை.
- ★ மழை கூட ஒரு நாளில் தேனாகலாம்.
- ★ மணல் கூட ஒரு நாளில் பொன்னாகலாம்.

## பயிற்சி

**1. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

*1. இடைச் சொல்லின் பயன்பாடு என்ன?*

*2. மூன்று வகையான இடைச்சொற்களை எழுதுக*

*3. உம் என்ற இடைச்சொல்லைப் பயன்படுத்தி இரண்டு வாக்கிங்களை எழுதுக.*

**2. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் இடைச்சொற்களை இனங் கண்டு எழுதுக.**

*பொழுது விடிந்ததும் போய் விடுவோம்.*
*மாணவர்கள் மட்டும் கலந்து கொண்டனர்.*

**3. பொருத்தமான இடைச்சொல்லைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைப்போம்.**

*1. கணிதம் ................ விஞ்ஞானம்................எனக்கு விருப்பமான பாடங்கள். (ஓ, உம், தான்).*

*2. நீ................ஓடி வா (தான், மட்டும், ஆ)*

*3. நாங்கள் வீடு................ போவோம். (மட்டும், உம், இனி)*

*4. இடி................மழை ................பாடசாலைக்கு வந்து விடுவோம். (தான், உம், ஓ)*

*5. நீ................படித்து விட்டாயா (தான், மட்டுமாவது, உம்)*